[2005 செப்டம்பர் 22

கொடுக்கும்போது, அதற்கான மின் கட்டணங்களை அரசே கட்டுவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல் நகராட்சியில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற மையங்களின் மின் வசதிக்கான அந்தத் தொகையை நகராட்சியே செலுத்துகிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த மையம் என்று கூறினால் அதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 9, திரு. கே.டி. பச்சைமால், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.*

9—

ஆரம்பச் சுகாதார நிலையம்

***70908—திரு. கே.டி. பச்சைமால்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, குருந்தன்கோடு அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் குருந்தன்கோடு ஆரம்பச் சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் குளச்சலில் வட்டம் சாரா மருத்துவமனை 38 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, குருந்தன்கோடு ஆரம்பச் சுகாதார நிலையத்தினைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.*

முற்பகல் 10–50

திரு. கே.டி. பச்சைமால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகின்றேன். குளச்சல் தொகுதிக்குட்பட்ட குருந்தன்கோடு அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்தில் சுமார்*

2005 செப்டம்பர் 22]

200 புற நோயாளிகள் தினமும் மருத்துவச் சிகிச்சைப் பெற்றுச் செல்கின்றனர். இந்த ஆரம்பச் சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்காக, இந்தப் பகுதியில் உள்ள ஊர்ப் பொதுமக்களும் அங்கேயிருக்கின்ற பூவை பாதுகாவல் சங்கமும் சுமார் 1 ஏக்கர் 32 சென்ட் நிலத்தை அரசுக்கு இலவசமாக அளித்துள்ளனர். இந்தப் பகுதியிலுள்ள ஏழையெளிய மக்களின் நலன் கருதி குமரி மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரியைப் பெற்றுத் தந்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையை வருகின்ற ஆண்டிலாவது அரசு அமைத்துத் தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற உடனே இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழகத்திலே முதன்முதலாக கிராமப் பகுதியிலுள்ள மக்களுக்கு நல்ல வாழ்க்கை அமைய வேண்டும், அவர்களுடைய நோய் குணமாக வேண்டுமென்ற எண்ணத்திலே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் இதுவரையிலும் 106 அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல், தமிழகம் இன்றையதினம் சுகாதாரத் துறையிலே முன்னோடியாக இருப்பதற்கு முதல் அடித்தளம் என்னவென்றால் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய எண்ணம். கிராம மக்கள் நல்ல வசதி அடைய வேண்டும் என்பதற்காகத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) எந்த அரசும் செய்யாத சாதனையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிராம மக்களுக்குச் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று வருகின்ற நிதியாண்டில் நிதிநிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கத்திற்குரிய தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சியில் மக்கள் நோய்நொடியின்றி வாழ்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, அதிலும்

குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலே 100 கோடி ரூபாய்க்கும் அதிகமாகச் செலவு செய்து மருத்துவமனையை அமைத்துத் தந்து அந்தப் பகுதி மக்களுடைய ஒட்டுமொத்த நல்ல எண்ணத்தையும் மக்கள் நல்வாழ்வுத் துறை பெற்றிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது என்று கருதுகிறேன். அதன் அடிப்படையிலே கிராமப்புற மக்களுடைய சுகாதாரம் மேம்பட வேண்டுமென்கிற அடிப்படையில் பல்வேறு நல்ல திட்டங்களை நிறைவேற்றி வருகின்ற சூழ்நிலையில் என்னுடைய தொகுதிக்குட்பட்ட முஞ்சிறை ஊராட்சிக்கு உட்பட்ட ஆறுதேசம் ஆரம்பச் சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்பட்டு 30 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. கிட்டத்தட்ட 200, 300 வெளிநோயாளிகள் வந்து செல்கிறார்கள். அதிகமான கிராமச் சூழ்நிலையிலே இருக்கின்ற பகுதி என்கின்ற காரணத்தினாலே, அந்தப் பகுதி மக்களுடைய வாழ்வு வளம் பெற வேண்டும் என்கிற உயரிய நோக்கத்தின் அடிப்படையில் ஆறுதேசம் பகுதியிலே இருக்கக்கூடிய ஆரம்பச் சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர அரசு முன்வருமா என்பதை உங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று வருகின்ற நிதியாண்டில் நிதிநிலைமைக்கேற்ப புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மணி.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குருந்தன்கோடு ஆரம்பச் சுகாதார நிலையத்தில் தற்போது இருக்கின்ற படுக்கைகள் எத்தனை? போதுமான மருத்துவர்கள் இருக்கின்றார்களா? ஏனென்றால், அந்த மாவட்டத்திலே, இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்ததற்குப் பின்னால் பல பகுதிகளில் ஆரம்பச் சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்பட்டு அதனுடைய தரம் உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால், போதுமான மருத்துவர் இல்லாத ஒரு பஞ்சம் இருந்து கொண்டேயிருக்கிறது. அதை நிவர்த்தி செய்கின்ற வகையில் இந்த குருந்தன்கோடு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்குப் போதுமான

2005 செப்டம்பர் 22]

மருத்துவர்களை நியமிக்கவேண்டும். அதுபோன்று ஆறுதேசத்தை பொறுத்தமட்டில், அங்கே ஒரே ஒரு மருத்துவர்தான் இருக்கின்றார். பெண் மருத்துவர் அங்கே தேவை. அந்த வகையில் போதுமான மருத்துவர்களைத் தந்து, இடைக்கோடு ஆரம்பச் சுகாதார நிலையத்தை உடனே திறந்து போதுமான மருத்துவர்களைத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே தமிழகத்திலே உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் மருத்துவர்களை நியமிக்க வேண்டுமென்று உத்தரவிட்டு அந்த அடிப்படையிலே கிட்டத்தட்ட 2,232 மருத்துவர்களை உடனடியாக நியமிக்க வேண்டுமென்றும் அவர்களை சர்வீஸ் கமிஷன்–தமிழ்நாடு தேர்வாணையத்தின்மூலமாக தேர்வு செய்ய வேண்டுமென்றும், அந்த இடைப்பட்ட காலங்களிலே அவர்களைத் தற்காலிகமாக நியமிக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டிருந்தார்கள். அந்த அடிப்படையிலே நமது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையை ஏற்று, பல்வேறு மாவட்டங்களிலே மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அந்தத் தேர்வு நடந்து, இப்போது பல இடங்களிலே— குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல் சில இடங்களிலே—மருத்துவர்கள் இல்லாத அந்தக் குறையை நீக்க வேண்டுமென்பதற்காக அவர்களுக்கு ஒரு வேலைவாய்ப்பு என்ற திட்டத்தின் அடிப்படையிலே வேலைகள் கொடுக்கப்படுகின்றன. மீண்டும் அவர்கள் அந்த வேலைக்குச் செல்வதற்கு வசதியை ஏற்படுத்துவதற்காக, இன்னும் இரண்டு வாரங்களுக்குள்ளாக எங்கெங்கு மருத்துவர்கள் இல்லையோ, அந்த இடங்களுக்குச் செய்தித்தாள்கள் மூலமாக விளம்பரத்தை அளித்து, அங்கே இருக்கக்கூடிய மருத்துவர்களையும் தேர்வு செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 10, திரு. அ. நடராஜன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.